# சமஷ்டி முறையே இனப்பிரச்னை தீர்வுக்குச் சிறந்தது!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 20 இதழ் 334
யாழ்ப்பாணம் புதன்கிழமை 4-1-1995

## ஜே. ஆர். பேட்டி

[கொழும்பு]
வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்ப்பதற்குரிய மிகச் சிறந்த வழி சமஷ்டி ஆட்சி முறை ஒன்றை அமைப்பதேயாகும்,

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

சமஷ்டி ஆட்சிமுறைஒன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்த நாட்டின் வடக்கு-கிழக்குப் பிரச்னையை சிறந்த முறையில் தீர்க்கலாம் என

(6ம் பக்கம் பார்க்க)

தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு சென்ற

## சிவத்தம்பி சண்முகதாஸ் திருப்பி அனுப்பப்பட்டனர்

(சென்னை)
பேராசிரியர் கா. சிவத்தம்பி உட்பட நான்கு பேராசிரியர்கள் தஞ்சை தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள விடாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

இப் பேராசிரியாகளுடன் வந்த துணைவியர்களும் பலவந்தமாக திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

சுவீடன் உப்சலா பல்கலைக்கழகப் பேரா

(5ம் பக்கம் பார்க்க)

### ★ அரசு-புலிகள் இடையில்

# மோதல் தவிர்ப்புக் குறித்து

# நேற்றைய பேச்சில் இணக்கம்!

## உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வரும்

[யாழ்ப்பாணம்]
மோதல் தவிர்ப்பு Cessation of Hostilities) தொடர்பாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்றைய தினம் நடைபெற்ற இரண்டாம் கட்ட பேச்சுக்களில இணக்கம் காணப்பட்டுள்ளது. இன்று அல்லது நாளை மோதல் தவிர்ப்பு பற்றிய அறிவிப்பை அரசு வெளியிடும். இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளும் இதனை அறிவிப்பார்கள்.

(6ம் பக்கம் பார்க்க)

## ராணுவ ஹெலியில் அரச குழு யாழ். வந்தது

(யாழ்ப்பாணம்
இரண்டாம் கட்ட பேச்சுக்களில் கலந்துகொள்வதற்காக அரச பிரதிநிதிகள் குழு நேற்றுக் காலை 9-05 மணியளவில் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் விசேட இராணுவ ஹெலிகொப்டரில் வந்திறங்கியது.

(5ம் பக்கம் பார்க்க)

## பேச்சு வெற்றியளித்தது- பாலபத்த பெண்டி

(கொழும்பு)
விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நடந்து முடிந்தது. மோதல்களை நிறுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. விரைவில் போர் நிறுத்தம் ஒன்று செய்யப்படும். மூன்றுவது கட்டப்பேச்சுவார்த்தை விரைவில் நடக்கும்.

அரச தரப்புக்குழுவுக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## நல்லெண்ண சமிக்ஞையாக 4 பொலிஸார் விடுதலை

(யாழ்ப்பாணம்)
தலைவர் திரு. வே. பிரபாகரனின் நல்லெண்ண சமிஞ்ஞையாகவும், விசேட பணிப்பின் பேரிலும் 1990-ம் ஆண்டிலிருந்து யுத்தக் கைதிகளாக இருந்த நாலு பொலிஸார் நேற்று விடுதலை செய்யப்பட்டார்கள்.

1990 - ம் ஆண்டு ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலைய தகர்ப்பின்போது விடுதலைப்புலிகளிடம் யுத்தக் கைதிகளாக பிடிபட்ட பி. எஸ். பி. பண்டார (கம்பளை), டபிள்யு. டி. தர்மசிறி [கம்பஹா], எச். டி. விமல்சந்திரசிறி (குளியாப்பிட்டிய), எஸ். ஈ.

(6ம் பக்கம் பார்க்க)

## அன்றாடப் பிரச்னை தீர்வுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### விடுதலைப் புலிகள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)
தமிழ மக்களின் அன்றாடப் பிரச்னைகளைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அரசு முன்பு வாக்குறுதி அளித்திருந்தபோதும்; அரசு தனது வாக்குறுதக்கு ஏற்ப எதனையும் செய்யவில்லை. எனவே உடனடியாக அரசு நடவடிக்கைகளை மேற்

(6ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன் கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.



நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 2-ம் கட்டப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகள் தரப்பு பிரதிநிதிகளையும், அரசு தரப்பு பிரதிநிதிகளையும் படங்களில் காணலாம். — படம்: 'தேவா'

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

சிங்கப்பூர் டெக்கரேசன் சாமான்கள் மற்றும் டெக்கரேசன் துணிவகைகள் என்பன கடந்த வியாழன்று நுணுவில் சந்திக்கும் சாவகச்சேரி நகர்ப் பகுதிக்கும் இடையில் பக்கீஸ் பெட்டியுடன் தவறியுள்ளது இவற்றை கண்டெடுத்தவர்கள் தயவு செய்து எனது முகவரிக்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: வ. நவரட்ணம், நுணுவில் கிழக்கு, கல்வயல் வீதி, சாவகச்சேரி. எ-4640

வெளிவந்து விட்டது:

**அறிவுக் களஞ்சியம் 28**

(எ4615)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# "மக்களின் அத்தியாவசிய பிரச்னைக்கு தீர்வுவேண்டும்"

## தமிழ்ச் செல்வன் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

எமது மக்கள் எதிர்கொள்ளும் அத்தியாவசியப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான முடிவுகள் எடுக்கப்படவேண்டும் என்று அரசுதரப்புப் பிரதிநிதிகளுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று இடம்பெற்ற 2ம் கட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்னர், விடுதலைப் புலிகள் தரப்புத் தலைவர் திரு. சு ப. தமிழ்ச்செல்வன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு வருகை தந்துள்ள உங்களை, விடுதலைப் புலிகளின் சார்பில் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

இன்றைய பேச்சுவார்த்தை தான் ஆக்கமுள்ளவைகளாகவும், அர்த்தமுள்ளவைகளாகவும் இருந்து. இரு பகுதியினரிடையே நல்லெண்ணத்தை வளர்க்குமென்று நான் மனதார நம்புகின்றேன்.

ஒக்டோபர் நடுப்பகுதியில் நடந்த முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையின் பின்னர் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை தொடங்குவதற்குத் தாமதம் ஏற்பட்டது ஓர் துரதிர்ஷ்டமான விடயம். அப்படியிருந்தும் எங்களது தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கும். உங்களுடைய அரசுக்கும் மத்தியில் கிரமமான கடிதப் போக்குவரத்துக்கள் நடைபெற்றன

அவை மூலம் பல முக்கியமான அடிப்படைப் பிரச்னைகளுக்கு இரு பகுதியினருக்குமிடையில் திருப்திகரமான முறையில் விளக்கங்கள் தரப்பட்டன

தமிழர் தேசியப் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பது சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முக்கிய நோக்கம் என்பது எங்களது கருத்தாகும். இப்பிரதான விடயம் பற்றி எங்கள் மத்தியில் எவ்வித தப்பபிப்பிராயங்கள் இல்லை.

எமது தலைவர் கருத்துத் தெரிவித்தவாறு. முழுச் சமாதான நடவடிக்கைகளும் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்படவேண்டும்.

பேச்சுவார்த்தையின் ஆரம்பக் கட்டத்தில் மக்கள் எதிர்கொள்ளும் உடனடி அத்தியாவசியப் பிரச்னைகளுக்கு முதலில் தீர்வு காணப்படவேண்டும்

பேச்சுவார்த்தையின் ஆரம்பக் கட்டத்தில் இந்த விடயங்களுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்று நாங்கள் உங்களுடன் தொடர்பு கொண்ட கடிதங்கள் மூலம் தெளிவாக்கி விளக்கியுள்ளோம். நீண்ட தொடர்ச்சியான போரினாலும். முன்னைய அரசாங்கம் கடைப்பிடித்த ஒடுக்குமுறைக் கொள்கைகளாலும் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் பாரதூரமான கஷ்டங்களுக்கு நிலையாகி உள்ளார்கள் போரினால் ஏற்பட்ட சாவுகள்' அழிவுகள் ஒருபுறமிருக்க, தடைகள், பொருளாதாரத் தடைகள், கட்டுப்பாடுகள் போன்றவற்றை அரசாங்கம் திணித்ததால் பாரிய கஷ்டங்கள் ஏற்பட்டதுமல்லாமல், அன்றாட வாழ்க்கையின் இயல்பு நிலையும் பெருமளவில் சீர்குலைந்துள்ளது.

இந்தக் கஷ்டங்கள், ஒடுக்குமுறைகள் முன்னைய அரசாங்கத்தால் தமிழ் மக்களின் மன உறுதியை உடைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். ஆனால் தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்குத் திடசங்கற்பம் பூண்டுள்ளார்கள்.

அந்த ஒடுக்குமுறைக்கொள்கைகள் பெருமளவு கஷ்டங்களை கொடுத்தாலும் அக்கொள்கைகளின் நோக்கங்களை நிறைவேற்றமுடியாது போயிற்று. இராணுவ ஒடுக்குமுறை கொள்கைகள் தேசிய இனப் பிரச்சனையை மேலும் தீவிரப் படுத்தியுள்ளது.

17 வருடகால அநீதியான ஐக்கிய தேசியக் கட்சியின் பின்னர் இனப்பிரச்சனைக்கு சமாதான வழிமூலம் தீர்வொன்று காணப்படவேண்டும் என்ற மனுவொன்றைப் பெற்று புதிய அரசாங்கம் ஆட்சிபீடமேறியுள்ளது.

திருமதி சந்திரிகா குமாரதுங்கா ஆட்சிக்கு வந்த பின்னர் எமது மக்கள் மத்தியில் தமக்குள்ள கஷ்டங்கள் நீங்கிவிடும் என்றும் சமாதான பேச்சுவார்த்தைகள் மூலம் ஆயுதப் போராட்டம் தீர்க்கப்பட்டுவிடும் என்றும் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டுள்ளார்கள்.

உங்களது ஜனாதிபதி பிரதம மந்திரியாகியவுடன் பொருளாதாரத் தடையைத் தளர்த்தி நல்லெண்ண சமிக்கையை காட்டியதை நாம் பெரிதும் வரவேற்றோம், ஆனால் இன்னும் எமது மக்கள் முகம் கொடுக்கும் பெருமளவிலான பிரச்சனைகள் உடனடியாக தீர்க்கப்படவேண்டியவையாக இருக்கின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் சமாதான சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டுமென விடுதலைப்புலிகள் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வந்துள்ளனர். இது தொடர்பாக போர்நிறுத்தம் செய்வதற்கும் விடுதலைப்புலிகள் தயாராக இருந்தனர்.

உங்களது அரசாங்கம் முதற்கட்டமாக இரண்டு வாரங்களுக்கு போர் நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைப்பதற்கு இணங்கியுள்ளது. போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும் நடைமுறைகள் பற்றி இன்று நாங்கள் பேசுவதற்கு இருக்கின்றோம். இந்தப் பிரதான விடயத்தில் நாங்கள் ஓர் இணக்கத்தை அடையலாம் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம்.

அடுத்ததாக பொருளாதாரத் தடை முற்றுமுழுதாக நீக்கப்பட்டு சிங்கள மக்களிற்கு அத்தியாவசியப் பொருட்கள் எவ்வளவு சுதந்திரமாக கிடைக்கின்றதோ அதேபோல் எமது மக்களிற்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கவேண்டும். இது ஓர் நியாயமான நேர்மையான கோரிக்கை.

அரசாங்கம் முற்றுமுழுதாக பொருளாதாரத் தடையை நீக்கி எமது மக்களின அவல நிலையைப் போக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

மூன்றாவதாக எமது மக்கள் சுதந்திரமாக போக்குவரத்துச் செய்வதற்கு குடாநாட்டிற்கும் வன்னிப்பெருநிலப் பரப்பிற்கும் இடையில் போக்குவரத்துப் பாதை ஒன்று திறக்கப்படவேண்டும் எமது மக்கள் கிளாலி நீரேரியைக் கடப்பதற்கு எவ்வளவு பாரிய அபாயங்களையும் கஷ்டங்களையும் எதிர்நோக்குகின்றார்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

இந்த விடயம் முதற் கட்டப் பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்டது பல காரணங்களுக்காக நாங்கள் சங்குப்பிட்டி - பூநகரி பாதை திறக்கப்பட வேண்டும் என்றும் அதற்காக பூநகரியிலுள்ள இராணுவம் வாபஸ் பெறப்பட வேண்டுமென்றும் வலியுறுத்துறோம். 'இந்த விடயம் எமது மக்களின இயல்பான வாழ்க்கையை பாரதூரமாகப் பாதிக்கின்றது. ஆகவே நாங்கள் இவ்விடயத்தில் அரசாங்கம் சாதகமான முடிவை எடுக்குமென்று எதிர்பார்க்கின்றோம்.

நான்காவதாக கடலில் எமது மக்கள் மீன்பிடிக்குல் தடையை நீக்கப்பட வேண்டும். கடலில் மீன் பிடிக்கும் தடை தமிழ் மீனவர் சமூகத்தில் சொல்லமுடியாதளவிற்கு கஷ்டங்களைக் கொடுத்து வருகின்றது. இத்தடையை அரசாங்கம் நீக்கி எம் மக்களின் நீண்ட காலக் கஷ்டங்களை இல்லாது ஒழிக்குமென்று நாம் மனதார எதிர்பார்க்கின்றோம்.

(5-ம் பக்கம் பார்க்க)


## குருபீடாதிபதியை வணங்கி ஆசி பெறுகிறோம்

இன்று குருபீடாதிபதியாக குருபீடமேறும் ''சிவாகம சிரோமணி'' கலாநிதி ''வித்தியாசாகரம்'' ஸ்கந்த - சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்கள் இலங்கையின் முதலாவது குருபீடாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டமை இந்துசமய உலகத்திற்கு பெருமைதரும் நிகழ்வாகும். குருபீடாதிபதி அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ இறைவனை வேண்டி பிரார்த்தித்து குருபீடாதிபதியிடம் ஆசிபெறுகிறோம்.

சிவஸ்ரீ பத்ம குமாரக் குருக்கள்

அமைப்பாளர் - ஸ்ரீதேவி குருகுலம்,

வன்னி மாவட்டம்,

(சி-1362)

இந்துமத ''குருபீடாதிபதியின்',

## பீடாரோஹணவிழா

''குருபீடாதிபதி'' கலாநிதி
வித்யாசாகரம் சிவபிரம்மஸ்ரீ
ஸ்கந்தவ சாம்பசிவ சிவாச்சார்யார்
அவர்களின்

★ பீடா ரோஹண விழா ★

இடம்: நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபம் [சட்ட நாதர் கோவிலடி]

காலம்: 04-01-95 புதன் பகல் 1.30 மணி

மேற்படி விழாவில் சமயப்பெரியார்கள், அறிஞர்கள் கலந்து சிறப்புரை ஆற்றுகிறார்கள். அனைத்து குருமார்களையும். அறிஞர்களையும், ஆலய நிர்வாகிகளையும், இந்து மக்களையும் வருக வருகவென அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
இந்துமத குருமார் ஒன்றியம்
யாழ். மாவட்ட தலைமையகம்
சட்டநாதர் கோவிலடி
நல்லூர்

(சி 1361)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்
கந்தையா இளையதம்பி

[அதிபர், கைதடி - நுணுவில் அ. த. க. பாடசாலை, இயக்குனர்சபை உறுப்பினர் - அறவழிப் போராட்டக்குழு]

கைதடி - நுணுவில் அ. த. க. பாடசாலை அதிபரும், எமது நிறுவனத்தின் முன்னாள் நிதித்துறை இயக்குனரும், தற்போதைய இயக்குனர் சபை உறுப்பினருமான அமரர் க. இளையதம்பி அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக

— அறவழிப்போராட்டக்குழு

த. பெ. இல 02,
கைதடி நுணுவில்,
சாவகச்சேரி.

[எ 4642]

## இதய அஞ்சலி

அமரர்
கந்தையா இளையதம்பி
(அதிபர், கைதடி-நுணுவில அ. த. க. பாடசாலை)

மதிப்பிற்குரிய அதிபர் திரு. க. இளையதம்பி அவர்களின் திடீர் மறைவுக்கு எமது இதய அஞ்சலிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சரஸ்வதி சனசமூக நிலையம் —
கைதடி மேற்கு
நவசனசமூக நிலையம்—நவபுரம் கைதடி
கைதடி தெற்கு சனசமூக நிலையம்
வளர்மதி சன சமூக நிலையம் —
கைதடி மத்தி

(எ 4643)

# யாழ். தொழில் நுட்ப கல்லூரியின் அவலநிலை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் முதல்தர தொழில்நுட்பக் கல்லூரிகளுள் ஒன்ருக விளங்கிய யாழ். தொழில் நுட்பக்கல்லூரி தற்போது பலநெருக்கடிக்கு மத்தியில் இயங்கிவருகின்றது. வடபகுதி மக்களுக்கு யாழ். பல்கலைக்கழகத்திற்கு அடுத்து இருந்த உயர் கல்வி நிறுவனம் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியாகும். நாட்டில் ஏற்பட்ட பிரச்னையைச் சாட்டாக வைத்து எமது கல்லூரி புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. இக்கல்லூரிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரிகள் தற்போது தரம் உயர்த்தப்பட்டும், நவீன ஆய்வு கூட வசதிகளோடும் வளர்ந்து வருகின்றன.

இவ்வாறு யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் அபிவிருத்தி தொடர்பாக மாணவர் அவை பிரதிநிதிகள் இருவர் கொழும்பு சென்று தொழில், தொழில் பயிற்சி அமைச்சரையும், கல்லூரி இயக்குனரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். அதுபற்றி மாணவர் அவை விடுத்த அறிக்கையின் சுருக்கம் வருமாறு;

எமது கல்லூரி பழைய வளங்களுடன் எமது விரிவுரையாளர்களின் ஒத்துழைப்போடும் மாணவர்களின் கடும் முயற்சியாலும் தவழ்ந்து வருகின்றது. 1990ம் ஆண்டு ஏற்பட்ட வன்செயலின் பின்னர் இக்கல்லூரிக்குரிய உபகரணங்கள் அனுப்பப்படவில்லை. அத்தோடு வெளிநாடுகள் அன்பளிப்புச் செய்த உபகரணங்களும் ஏனைய கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது இக் கல்லூரி பல பிரச்னைகளுக்கு முகங் கொடுத்து வளர முனைகின்றது. அதற்குதவியாகத் தற்போதைய மாணவரவை முழுமூச்சுடன் இயங்கி வருகின்றது.

இத்தொழில்நுட்பக் கல்லூரியை பழைய நிலைமைக்கு உயர்த்துவதற்கு நாம் பெரும் முயற்சி எடுத்துள்ளோம். இவற்றை உடனடியாக தீர்த்து எமது கல்வியின் முன்னேற்றத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிருேம். தற்போதைய நிலையில் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகளாவன:

எமது கல்லூரிக்கு நிரந்தரமான அதிபர் இல்லாமை. 2. நிரந்தரமான தகுதியான விரிவுரையாளர்கள் இல்லாமை, 3. பராமரிப்புத் தொழிலாளர்கள் பற்ருக்குறை, மேற்பார்வைக்குரிய தொழிலாளி இல்லாமை, 4. பொறியியல் துறையில் டிப்ளோமா கற்கை நெறி இல்லாமை, 5. இரவில் ஒளி வசதிக்குரிய பிறப்பாக்கி இருந்தும் மின் இணைப்புகள் பழுதாகியுள்ளதால் இரவில் படிக்க முடியாமை, 6. பொறிகள் பற்ருக்குறையாக உள்ளதோடு அவற்றை இயக்குவதற்கு பின் பிறப்பாக்கி போதாமை, தேவையான உபஉறுப்புகள் இல்லாமை, 7. நடந்து முடிந்த பரீட்சைகளின் பெறுபேறுகள் காலதாமதமாகக் கிடைப்பதால் அடுத்த பரீட்சைக்கு தோற்றுவது கடினமாக உள்ளது, 8. போதிய தளபடங்கள் இல்லாமை, 9. கணனி வசதியும் ஆய்வு கூடமும் இல்லாமை, 10. குளிரூட்டிய அறைகள் இல்லாமை, 11. மின்சாதன பொருட்கள் பழுதடைந்துள்ளன. 12. எமது கல்லூரிக்கு வாகன வசதி இல்லாமை, 13. போதிய வகுப்பறைகள் மாணவரவைக்கு அலுவலகம் இல்லாமை. 14. பிரதி பண்ணும் கருவி பற்ருக்குறை உள்ளது, பழுதடைந்தும் உள்ளது. 15. தட்டச்சுக் கற்கை நெறிக்குரிய மின் சாதன தட்டச்சு இல்லாமை. சாதாரண தட்டச்சு பற்ருக்குறை. 16. பொறி முறை வரைதலுக்குரிய நவீன உபகரணங்கள் இல்லாமை. 17, மலசல கூடங்கள் பழுதடைந்துள்ளன. 18. உணவு விடுதி சீரானதும் மலிவாகவும் இயக்குவதற்குரிய பொருட்கள் பற்ருக்குறை, போதிய வசதி உடைய மண்டபம், மேடை மண்டப கதிரை இல்லாமை. 19. தொழில் நுட்பக்கல்லூரியில் படித்து சான்றிதழ் பெற்று வெளியேறும் மாணவர்களுக்குரிய வேலைவாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் ஏனைய தொழில் நுட்பக்கல்லூரிக்கு இருக்கும் அடிப்படை வசதிகள் கூட எமது தொழில் நுட்பக்கல்லூரிக்கு இல்லை இது பூர்த்தி செய்யப்படவேண்டும்.

20. ஏனைய உயர்கல்வி நிறுவனங்களிற்கு வழங்கப்படும் உதவுத்தொகையில ஒருசிறிய பகுதியே அத்துடன் குறைந்தளவு மாணவர்களிற்கே வழங்கப்படுகின்றது இக்குறைபாடு நிவர்த்தி செய்யப்படவேணடும்.

## தீர்க்கப்பட்ட கோரிக்கைகள்

1. அதிபர் நியமனம் இவ்வருட முற்பகுதியில் நியமித்தல் 2. பராமரிப்பு தொழிலாளரும் இவ் வருட முற்பகுதியில் நியமித்தல் 3. கல்லூரிக்குரிய வாகனத்தை இங்கு வாங்கஅனுமதி அளிக்கப்பட்டது. 4. வேலைவாய்ப்புகளில் தொழில் நுட்பக்கல்லூரியில் கல்வி கற்று முடிப்போருக்கும் முன்னுரிமை வழங்கல் 5. ஆய்வுகூடம், தளபாடம். மின்சார விநியோகம் வகுப்பறை பற்ருக்குறை போன்றவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பூர்த்தி செய்தல்.

## ஒதுக்கப்பட்ட நிதி விபரம்

பழுதடைந்த கட்டிடங்களை திருத்த 2 மில்லியன் புதிய கட்டிடங்களை அமைக்க 5 மில்லியன். தளபாடம் செய்ய 1. 5 மில்லியன், இயந்திர உபகரணம் வாங்க 5 மில்லியன் நூல்நிலைய பாவனைக்கு 1 5 லட்சம்

6. பரீட்சை பெறுபேறுகளை விரைவில் அனுப்புவற்கு விடைத்தாளை திருத்தும விரிவுரையாளர்கள் பற்ருக்குறையாக உள்ளதாகவும், அவர்களின் அசட்டையீனமும் காரணமாம் இனிஇவ்வாறு நடைபெருமல் விரைவில் வெளிவர முயற்சி செய்வதாக கூறினுர்.

7. முன்னைய அரசாங்கத்தின் ஆட்சி காலத்தில் வழங்கப்பட்ட வெளிநாடுகளின் அன்பளிப்புகளான லேத் மிசின், வாகனம் என்பன யாழ். குடாவிற்கு எடுத்து செல்ல முடியாது என்று காரணம் கூறி லேத்மெசின் ஏனைய கல்லூரிகளுக்கு மாற்றப்பட்டது. வாகனத்தினை ஒரு அரசியல்வாதியின் சொந்த பாவனைக்கு பயன்பபடுத்தப்ட்டது. இதுதற்போது வன்செயலில் சேதமாக்கபட்டு பழுதடைந்து கராச்சில் உள்ளது. திருத்திய பின் எமது கொழும்பு தேவைக்கு பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

8. எமது கல்லூரிக்கு தேவையான பொருட்களை கொழும்பில் கொள்வனவு செய்து அவற்றினை இங்கு அனுப்புவதற்கு எமது முகவராக கொழும்பில் தனது அலுவலகத்தில் கடமை புரியும் ஒருவரையும் நியமித்துள்ளார்

9. உதவித் தொகைக்கு, தற்போது ஏனைய கல்லூரி மாணவருக்கு வழங்கி வரும் Werd University Service of Canada வுடன் தொடர்பு கொள்ளும்படி ஆலோசனை கூறினுர். Wusc உடன் தொடர்பு கொண்ட போது வட மாகாணத்திற்கு ஒருவரும் செல்ல முடியாது. அங்கு பிரச்னை நடப்பதாக முன்னைய அரசாங்கத்தால் கூறி எமதுமாகாணம் அவர்களது சிபாசில் இடம் பெறவில்லை என்றும் கூறப்பட்டது. எமது நிலையினை நாம் விளக்கிய பின்பு இதுபற்றி உயர் ஸ்தானிகருடன் கலந்து முடிவு செய்வதாகவும் தமக்கு எமது கடிதத்தினை தருமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

எமது கல்லூரியில் நிலவும் பிரச்சனைகளை நேரடியாக கண்டறிய தனது அலுவலர் ஒருவரை இங்கு அனுப்புவதாகவும் இயக்குனர் கூறினுர். [சி]

---

தங்கம்மா அப்பாக்குட்டியின்

# பிறந்தநாள் அறநிதிய சிறப்பு விழா

[யாழ்ப்பாணம்]

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்தநாள்' அறநிதியச் சிறப்பு விழா இம்மாதம் 7 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு மருதனுர் மடம் இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும்.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் மங்களவிளக்கேற்ற வரவேற்புரையை திரு. ஆறு திருமுருகன் நிகழ்த்துகிருர். ஆசியுரையை மகாராஜ ஸ்ரீ சுது. ஷண்முகநாதக்குருக்கள் வழங்குகின்ருர்.

சைவப்புலவர் சு. செல்லத்துரை, தமிழருவி த. சிவகுமாரன், திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம். சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், கம்பவாரிதி இ. ஜெயராஜ் ஆகியோர் சொற்பொழிவாற்றுகின்றனர்.

பிற்பகல் நிகழ்ச்சி 2.30 மணிக்கு ஆரம்பமாகும். கௌரவிப்புப் பெறுபவர் பௌராணிகர் சிவத்திரு சி. சண்முகவடிவேல் வாழ்த்துரையை நல்லை ஆதீன குருமகா சந்நிதான ஸ்ரீ லஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் வழங்குகிருர்' பண்ணிசை அரங்கும் பாராட்டு நிகழ்வில் பொன் சுந்தரலிங்கம், அர் திருஞானசம்பந்தன், திருமதி மோகனும்பிகை கணேசன், நா. மு. நவரத்தினம் ஆகியோர் பங்குபற்றுகின்றனர். (ம)

---

# பல்கலை மாணவர்க்கு விடுதி வசதி

(கொழும்பு)

பல்கலைக் கழக மாணவர்களின் விடுதி பிரச்னையை வருடாந்தம் படிப்படியாக தீர்த்துவைப்பதற்கான திட்டமொன்றை கல்வி, உயர்கல்வி அமைச்சு தயாரித்துள்ளது.

இதற்கென இந்த அமைச்சு 19 கோடி 50லட்சம் ரூபாவை செலவிடும் விடுதி வசதிகளை ஒழுங்கு செய்வதற்கும் புதிய கட்டடங்களை அமைப்பதற்கு இந்த ஒதுக்கீடு செலவிடப்படும்.

பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு ஒரு மாணவருக்கு விடுதிவசதி வழங்க ஒரு லட்ச ரூபாவை செலவிடுகிறதுஎன்று தெரிவிக்கப்பட்டது, நிர்மாண வேலைகள், பராமரிப்பு வேலைகள் தளபாட வசதிகள் போன்றவற்றிற்கு இத்தொகை செலவிடப்படுகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 68.4 வீதம், மொறட்டுவ பல்கலைக்கழகத்தில்28 வீதம் றுகுணுபல்கலைகழகத்தில் 31 வீதம் ஜயவர்தனபுர பல்கலைகழகத்தில் 27 வீதம் களனி பல்கலைக் கழகத்தில் 26 வீதம், கொழும்பு பல்கலைகழகத்தில் 23.5 வீதமான மாணவர்களே விடுதி வசதி பெற்றுள்ளார்கள். சகல பல்கலைக் கழகங்களையும் ஒப்பீடு செய்து பார்க்கும்போது 33.2 சதவீத மாணவர்களே விடுதி வசதி பெற்றுள்ளார்கள்.

இந்த வருட முடிவில் 40 சதவீத மாணவர்கள் விடுதி வசதி பெற்றுக்கொள்வார் என உயர் கல்வி அமைச்சு அதிகாரி தெரிவித்துள்ளார். விடுதி வசதி பெற்றுக்கொள்ளாத மாணவர் ஒவ்வொருவருக்கும் மேலதிகமாக 500 ரூபா வழங்கப்படும் எனவும் அவ்அமைச்சு அதிகாரி மேலும் சொன்னுர். (கே-இ)

---

# வைத்தியசாலை முன்னேற எல்லோரும் உதவ வேண்டும்

(நெல்லியடி)

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளையின் முயற்சியினுல் இவ் வைத்தியசாலை கடந்த வருடம் சிறப்பாக இயங்கியுள்ளது.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை மாலை பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்ற வருடாந்த பிரிவுபசார விழாவில் கலந்து கொண்டு பேசிய பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் திரு. கே. இராஜலிங்கம் தெரிவித்தார்.

மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர்தொடர்ந்துபேசுகையில்:

ஒரு வைத்தியசாலையின் முன்னேற்றத்தை ஒருவரினுல் மட்டும் உயர்த்தமுடியாது. எல்லோரும் உதவிக்கரம் நீட்ட வேண்டும். இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் நாங்கள் எமது மனச்சாட்சியின்படி செயற்பட வேண்டுமென்றும் என்ருர். 160

---

ஒரே வருடத்தில்

# 6 கடல்களை நீந்தி கடந்து புதிய சாதனை

[சென்னை]

ஒரே வருடத்தில் ஆறு கடல்களை நீந்திக் கடந்து13 வயது தமிழகச் சிறுவன் குற்ருலீஸ்வரன் புதிய சாதனை படைத்துள்ளார்.

கடந்த 30 ம் திகதி அந்தமான் கடல்பகுதியை நீந்திக் கடந்ததன்மூலம் புதிய சாதனையை இவர் படைத்துள்ளார்.

1966 இல் இந்தியாவைச் சேர்ந்த மிற்கற்சன் ஒரே ஆண்டில் ஐந்து கடல்களை நீந்திக் கடந்து சாதனை படைத்தமையை குற்ருலேஸ்வரன் முறியடித்துள்ளார்.

உலக நீச்சல போட்டிகளில் கலந்து கொள்வதற்கு தனக்கு உரிய வயது இல்லாததால் 1996 ம் ஆண்டு இப் போட்டிகளில் கலந்துகொள்ளப் போவதாகத் தெரிவித்தார். க

---

# டீசல் வராததினுல் ஜெனறேற்றர் இயங்கவில்லை

(நெல்லியடி)

சுகாதார அமைச்சினுல் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு புதிய ஜெனறேற்றர்கள் இரண்டு அனுப்பி வைக்சுப்பட்டும்' அதற்குரிய எரிபொருளான டீசல் இதுவரை வந்துசேரவில்லை.

புதிய ஜெனறேற்றர்கள் இரண்டும் கட்டிடத்தில் இணைக்கப்பட்டுவிட்டதாகவும் அதற்குரிய டீசல் கொழும்பிலிருந்து கிடைத்ததும் ஜெனரேற்றர் செயல்படுமென்றும் மேற்படி வைத்தியசாலையின் பிரதம லிகிதர் திரு, பி. சிவநாதன் தெரிவித்துள்ளார் 160

---

## 2780 தொன் பொருள் குமணவில் வந்தது

(யாழ்ப்பாணம்)

குமண கப்பல் நேற்று முன் தினம் மாலை பொருட்கள் இறக்கிவிட்டு கொழும்புநோக்கிப்புறப்பட்டது. இக்கப்பலில் தனியாருக்கு தேங்காய் எண்ணெய், கோழித்தீன், சர்க்கரை, பயறு, உழுந்து, விதை உருளைக்கிழங்கு உட்பட 2780 தொன் பொருட்கள் எடுத்து வரப்பட்டன. -இ

## வீதிகள் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பெய்த மழையால் யாழ். நகரில் உள்ள வீதிகள் குன்றும் குழிகளுமாகக் காட்சியளிக்கின்றன. சைக்கிள் பயணிகள் போக்குவரத்து இதனுல் பாதிப்புக்குள்ளாகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதிகளைத் திருத்தி அமைக்கும் வேலையில் யாழ். மாநகராட்சிமன்றஊழியர்கள் ஈடுபட்டு வருகிருர்கள். இதன் ஆரம்ப நடவடிக்கையாக மிக மோசமாகவுள்ள யாழ்ப்பாணம் நாவலர் வீதி தற்பொழுது செப்பனிடப்பட்டு வருகிறது. 162

# நெஞ்செரிவு, வயிறுஎரிவு, வயிற்றுப்புண் (அல்சர்)

(Peptic Ulcer, Burning Sensation)

வைத்திய கலாநிதி

எஸ். பி. ஆர். சீர்மாறன்

'வாயைக்கட்டினாலும் வயிற்றைக்கட்டாதே' என எமது பெரியோர்கள் சொல்வது வழக்கம். எனவே மனிதனுக்கு உண்ணுவது என்பது ஓர் பிரதானமான செயற்பாடாகும். இந்த முக்கியமான செயலைச் செய்வது எமது உணவுக்கால்வாய்த் தொகுதியாகும். இது எமது முகத்திலுள்ள வாயில் ஆரம்பிக்கின்றது, அதனைத் தாடர்ந்து, தொண்டையிலிருந்து 25 ச. மீ. நீளமுடைய சிறிய குழாய் வயிற்றை இணைக்கின்றது. வயிறு, சிறுகுடல், பெருங்குடல், மலக்குடல், மலவாசலில் முடிவடைகின்றது. இதனுள் வயிறுமிகவும் பிரதானமானது

## எமது வயிறு

நாம் உண்ணுகின்றஉணவை தற்காலிகமாக சேர்ப்பதற்கும் கொழுப்புச்சத்து உணவுகளை சிறுதுளிகளாக்கவும், ஏனைய உணவுப் பொருட்களை வயிற்றில் சுரக்கப்படுகின்ற சுரப்புகளுடன் கலக்கவும், முக்கியமாக ஐதரோகுளோரிக் அமிலம் என்கின்ற மிகவும் முக்கியமான செறிவான அமிலத்தையும்புரதச்சத்து உணவுகளையும் சமிபாடடையச் செய்யும் பெப்சினோஜன் நொதியத்தையும் ஏனைய சுரப்புக்களைத் தூண்டும் கஸ்ற்றின் என்கின்ற ஓமோனையும் சுரக்கின்றது.

இதேபோன்று வயிற்றைத் தொடர்ந்து இருக்கின்ற சிறுகுடலின் முற்பகுதியை டியோடினம் என அழைக்கின்றோம். இதில் புருன்னர்ஸ் சுரப்பிகளின் கார சுரப்புகளும் பித்தப்பையிலிருந்து வருகின்ற காரமான பித்தமும் சதையின் சுரப்புக்களும் வயிற்றிலிருந்து வருகின்ற செறிவான அமிலத்தை நடுநிலையாக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்றன. எமது வயிறு மூன்று தசைநார் படைகளை கொண்டது. வயிற்றின் உட்புறப்பகுதியில் மெல்லிய கவரிங் (சீதப்படை) இருக்கின்றது.

## வயிற்றில் எரிவையும் புண்ணையும் ஏற்படுத்தும் காரணிகள்

மருந்துக் குளிசைகள்: அஸ்பிரின், டிஸ்பிரின். இன்டோசிற், புருபன், பொன்ஸ்ற்றன், எறித்திரோமைசின், பிரிட்னிசிலாஸன் போன்றமருந்துக் குளிசைகள் வயிற்றின் உட்புறச் சுவரின் மென்மையான பகுதியை பாதித்து விடுவதனால் பின்னர் அவ்விடங்களில் அசிட் படுகின்றபோது வயிறு எரிவு வயிற்றில் நோ என்பன ஏற்படுகின்றன. சாராயம் வயிற்றில் புண்களை உண்டாக்கும்.

சில மருத்துவ நிலைமைகளின் போது வயிற்றில் புண்கள் ஏற்படும். அதாவது கடுமையான மன அழுத்தம் (Severe Stress[ உடன் காயங்கள் செல், விமானக்குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு, வீதி வாகன விபத்துக்கள், வேலைத்தள விபத்துக்கள், விளையாட்டு விபத்துக்கள், பயிற்சி விபத்துக்கள் என்பவற்றின் போது ஏற்படுகின்ற காயங்களின் போதும் வயிற்றில் புண்கள் ஏற்படும்.

அதிர்ச்சி (Shock): பாரிய காயங்களின் போது அல்லது சத்திர சிகிச்சையின்போது சடுதியான கடுமையான இரத்தப்பெருக்கு ஏற்படுகின்ற போது அதிர்ச்சி ஏற்படும். செப்ற்றிஸிமியாவின் போதும் அதிர்ச்சி ஏற்படும். ஈரலில் வியாதிகள் ஏற்படுகின்றபோது சிறுநீரகங்களில் வியாதி ஏற்படுகின்ற போதும் அதிர்ச்சி ஏற்படும். இவற்றின்போது வயிற்றில் புண்ஏற்படுகின்றது.

## உணவுப் பழக்கம்

நாம் உண்ணுகின்ற உணவுகளைச் சமிபாடடைச் செய்வதற்குத் தேவையான அமிலம் வயிற்றிலிருந்துசுரக்கப்படுவதை அடிப்படையில் மூன்று விதமாக காரணிகள் கட்டுப்படுத்துகின்றன. உணவை நினைதல், பார்த்தல், மணத்தல் என்பவற்றின் போது மூளையினால் வயிற்றுக்கு விநியோகம் செய்கின்ற நரம்பு தூண்டப்பட்டு அசிட் சுரக்கப்படுகின்றது. இதனை (Chphalic Phase) என்றழைப்பார்கள். உணவு வயிறை அடைந்ததும் வயிற்றின் சுவர்ப்பகுதியில் சற்று விரிவாக்கமடைவதனால் அசிட் சுரக்கின்றது. இது (Gastric Phase) எனப்படுகின்றது. உணவு சிறுகுடலில் முற்பகுதியான டியோடினத்தை அடைந்ததும் வயிற்றிலிருந்து அமிலம் சுரக்கப்படுவதைத் தூண்டுகின்றது.

சிறுவயகிலிருந்து அனேகமாக காலை, மதியம், இரவு என மூன்று வேளைகளில் உண்ணும் பழக்கத்தைக் கொண்டவர்கள் என்கின்ற முறையில் எமது மூளையும் வயிறும் இந்த மூன்று வேளைகளிலும் அசிட் சுரக்கப்பட்டுவிடும். எனவே சிறிதளவு உணவேனும் இந்த குறிப்பிட்ட நேரங்களில் அடிக்கடியும் நீண்ட நாட்களுக்கும் உண்ணமல் விடுகின்றபோது வயிற்றில் சுரக்கப்படுகின்ற அசிட் பயன்படுத்தப்படாமல் தேங்கி நிற்கும். இதன்போது படிப்படியாக வயிற்றின் உட்புறச்சுவரை அரிக்கும். இறுதியில் வயிற்றுப் புண்ணும் குடற்புண்ணும் ஏற்படும்.

புகைத்தல்:- சிகரெட், பீடி, சுருட்டு அடிக்கடியும் அதிகளவிலும் குடிப்பவர்களுக்கு வயிறறிலும் குடலிலும் புண் ஏற்படும். மேலும் வேறு ஏதாவதொரு காரணத்தினால் வயிற்றுப்புண் ஏற்பட்டுவிட்டால் சிகரெட், பீடி, சுருட்டு பிடிக்கின்றபோது இந்தப்புண்கள் இலகுவில் ஆறுது.

மனம்:- மனதில் அழுத்தம், பயம், டென்சன், கவலை, சோர்வு, குழப்பம் என இருக்கின்றபோது சுரக்கப்படுகின்ற அசிட்டின் அளவு சிலவேளைகளில் கூடலாம். மேலும் இவர்கள் இந்த நிலையின் போது வேளா வேளைக்கு உணவருந்தமாட்டார்கள். கவலையின் நிமித்தம் அடிக்கடி சிகரெட் குடிப்பார்கள். மது அருந்துவார்கள். எனவே இவர்களுக்கு வயிற்றில் புண் ஏற்படும்.

பரமபரை:- பரம்பரையில் தாய் அல்லது தகப்பனுக்கு வயிற்றில் புண் இருந்தால இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் வயிற்றில் புண் ஏற்படும் ஆபத்து ஏனையவர்களைவிட சற்று அதிகமாகவே இருக்கின்றது. இரத்த குறூப் (ஓ) உள்ளவர்களுக்கு ஏனைய ரத்த குறுப்பினர்களை விட வயிற்றுப்புண் ஏற்படும் ஆபத்து சற்று அதிகமாகவேஇருக்கிறதென ஆய்வுகள் கூறுகின்றன.

## அறிகுறிகள்

நெஞ்சில் எரிவு ஏற்படுதல், பசிக்கின்றபோது வயிறு எரிதல், நோவுதல், நடுநிசியில் வயிறு எரிதல், வாந்தி எடுக்க வேண்டும் போன்ற இயல்பு, வாந்தி எடுத்தால் வலி குறைதல், வயிறு பொருமி ஊதியிருத்தல், நெஞ்சுவலி, மார்பு வலி ஏற்படுதல், வயிற்றுப் பிரட்டல் படிப்படியாக பசி குறைதல், பின்னர் உடல் நிறை குறைதல், முதுகுவலி ஏற்படுதல் என்பன ஏற்படும்.

ஆபத்துக்கள்:- ஆரம்பத்தில் மேலோட்டமாக இருக்கின்ற புண் நிரந்தர வயிற்றுப் புண்ணாகிவிடும். இதனால்ஒழுங்காக வேலை செய்ய முடியாமை, அடிக்கடி லீவு எடுத்தல், இதனால் பொருளாதாரப் பிரச்னை, மனச்சோர்வு, மற்றும் பத்து வருடங்கள் நீடிக்கின்றபோது வயிற்றுப் புற்றுநோய் ஏற்படுதல், புண்களினால் சுவரில் துவாரம் ஏற்பட்டு கடுமையான இரத்தப் பெருக்கு ஏற்படலாம்.

சிகிச்சைமுறை:- டைஜின், அலுரொக்ஸ், அக்ரால், ஜெலுசில் கவிஸ்கோன் இவ்வாறு அசிட்டை நடுநிலையாக்கும் குளிசைகள் இருக்கின்றன. நோயின் கடுமைக்கும் வயதிற்குமேற்ப 1 அல்லது இரண்டு குளிசைகள் காலை, மதியம், இரவு என மூன்று வேளைகளுக்கு 5 - 7 நாட்களுக்கு தேவைப்படின் நீண்ட நாட்களுக்கும் எடுக்கலாம். மேலும் சிமிற்றிடின், ரணிற்றிடின், பமோற்றிடின், பமோற்றிடின் (40 mg இரவில்) நிஸற்றிடின் போன்ற விலையுயர்ந்த குளிசைகள் கொடுக்கப்படும். இவற்றிற்கு குணமடையாவிட்டால் வயிற்றுக்கு விநியோகம் செய்கின்ற நரம்புகளைத் துண்டித்தல், வயிற்றைப் பாதியாக வெட்டுதல் போன்ற பாரிய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும்.

ஆலோசனைகள்:- சிறிதளவு உணவேனும் மூன்று வேளைகளில் ஆகக் குறைந்தது இரண்டு முறையாவது உண்ண வேண்டும். குறிப்பாக காலையில் எப்படியாவது சிறிதளவேனும் (விரத நாள் தவிர்ந்த) கட்டாயமாக உண்ண வேண்டும். உணவு உண்ணுகின்ற வேளை வருகின்றபோது பிளேன்ரி குடித்துப் பசியைப் போக்குவது ஆபத்தில் முடியும். ஏதேனும் உண்ண வேண்டும், சிகரெட், பீடி, சுருட்டு பிடிப்பதை அறவே நிறுத்தவேண்டும், வெறும் வயிற்றில் குறிப்பாக அஸ்பிரின், டிஸ்பிரின், புருபன், பொன்ஸ்ற்றன், பிரட்னிசிலோன் போன்ற குளிசைகள் குடிப்பதைதவிர்க்க வேண்டும். ஏதேனும் உணவு உண்ட பின்னரே மருந்துக்குளிசைகள் குடிக்க வேண்டும். வயிற்றில் எரிச்சல் நோ, வலி, சமிபாட்டுக்குறைபாடு போன்ற பிரச்னைகள் ஏற்பட்டால் ஆரம்பத்திலேயே மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது

தேவைப்படின் சத்திர சிகிச்சை நிபுணரின் ஆலோசனையையும் பெறவேண்டும்.

---

## பீடா ரோகண விழா

(யாழ்ப்பாணம்)

கலாநிதி அருள் ஜோதிஸ்கந்த சாம்பசிவ சிவாசசார்யார் அவர்களின் பீடா ரோஹண விழா நல்லூர் திவ்பஜீவனசங்க மண்டபத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு நடைபெறும்.

-ம

---

### தமிழீழ நீதிமன்றில்:

## கசிப்பு வழக்கில் எதிரிக்கு ரூபா 80.000 அபராதமும். சிறையும்

(உடுவில்)

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும்கோட ாகலனவை 210 லீற்றர் உற்பத்தி செய்ததாக சங்கானை காவல் துறையினரால் குற்றம் சாட்டி மானிப்பாயைச் சேர்ந்த ஒருவர்மீது சுன்னாகம் மாவட்ட நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் குற்றவாளிக்கு 80,000 ரூபா அபராதமும் ஆறுமாத சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.

அபராதப்பணம் செலுத்தத் தவறினால் மேலும் நான்கு வருட சிறைத்தண்டனைக்கும் நீதியாளர் ஞா. அறிவொளி உத்தரவிட்டார்.

17 போத்தல் கோடா உற்பத்தியில் ஈடுபட்ட குற்றத்துக்காக ஈவினைவைச் சேர்ந்த ஒருவர் மீது சுன்னாகம் காவல் துறையினரால் தொடரப்பட்டவழக்கில் குற்றவாளிக்கு 40,000 ரூபா அபராதமும் 30 நாள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

மேலும் இரண்டரைப் போத்தல் கசிப்பினை வீட்டில் வைத்திருந்தமைக்காக உரும்பிராய் யேற்கைச் சேர்ந்த ஒருவருக்கு8000 ரூபாஅபராதமும்,15 நாள்சிறைத்தண்டனையும் அபராதம் செலுத்த தவறினால் 320 நாள் சிறையும் தண்டனையாக விதிக்கப்பட்டது.

குப்பிளான்தெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்த ஒருவருக்கு இரண்டேகால் போத்தல் கசிப்பை வீட்டில் வைத்திருந்மைக்காக 4000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் கட்டத் தவறினால் 120 நாள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

அதே ஊரை சேந்த மற்றொருவருக்கு $1\frac{3}{4}$ போத்தல் கசிப்பு வைத்திருந்த குற்றத்துக்காக 4000 ரூபா அபராதமும் அபராதம் செலுத்த தவறின் 40 நாள் சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.

109

## புனித - லூசியாள் திருவிழா

(அரியாலை)

பார்வை இழந்தவர்களின் பாதுகாவலரான மன்னார் பள்ளிமுனை புனிதலூசியாள் திருவிழா இன்று 4ம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறும். இறுதிநாளான 13ம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் ஆயர் கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சொருப பவனியும் இடம்பெறவுள்ளன.

-59

## இன்று

0 0

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய கொடியேற்ற உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடந்து 10 தினங்கள் இடம் பெறும்.

எதிர்வரும் 12ம் திகதிதேர்த் திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்த திருவிழாவுடன் உற்சவம் நிறைவுபெறும்.

0 0

(வட்டுக்கோட்டை)

சங்கானை பொதுநூலக வாசகர் வட்ட வருடாந்தப் பொதக்கூட்டம் இன்று 4ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் சங்கானை பொதுநூலக மண்டபத்தில் வாசகர் வட்டத் தலைவர் சைவப்புலவர் நா. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

-139

## வைத்தியசாலை வளவில் திருட்டு

(நெல்லியடி)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை வளவில்நின்ற வாழைமரத்திலிருந்தவாழைக் குலை திருடப்பட்டுள்ளது.

இதேவேளை வைத்தியசாலையின் முன்பக்கமாக வளர்ந்து நின்ற மூங்கில் மரத்திலிருந்தும் மூங்கில் தடிகள் வெட்டப்பட்டுள்ளன வென்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

-160

### கிணற்றிலிருந்து

## உவர் நீரை வெளியேற்றி நன்னீரை பெற முடியும்

(உடுவில்)

''நாம் தினமும் உபயோகப்படுத்துவதால் ஏற்படும் அழுக்கு நீர் நிலத்தில் கரைந்து உட்செல்வதனாலும் தென்னம்பிள்ளைகளுக்கு வருடா வருடம் பசளையாக இடப்படுகின்ற உப்பும் நிலநீர் உவர்த் தன்மையாக மாற காரணமாகின்றன. கடல்மட்டத்துக்கு மேல் காணப்படும் நன்னீரில் இவ்வாறு உவர்த்தன்மை ஏற்படுவதை உவர் நீரை தொடர்ச்சியாக வெளியேற்றுவதன் மூலம் நீக்க முடியும்''

இளைப்பாறிய நீர்ப்பாசன திணைக்களப் பொறியிலாளர் திரு. மு. இரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

கந்தரோடைக் கிராமத்தில் உள்ள கிணற்று நீரில் உவர்த் தன்மை செறிந்திருப்பதை மாற்றுவதற்கு அவர் மேற்கொண்டு வந்த முயற்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதை தொடர்ந்து அவர் தமது கருத்தை தெரிவிக்கையில் இவ்வாறு கூறினர்.

சுமார் முப்பது வரையான கிணறுகள் அருகருகில் தெரிந்தெடுக்கப்பட்டு தினமும் உவர்நீர் வெளியேற்றப்பட்டதாகவும், கடல்நீர்மட்டத்துக்கு மேல் காணப்படும் கிணற்று நீரில் உள்ள உவர்த் தன்மை இத்திட்டத்தால் வெற்றி கண்டிருப்பதாகவும் இதில் மூன்று கிணறுகள் முற்றாக நன்னீராக மாற்றம் பெற்றும் ஏனையவை அறுபது வீதத்துக்கு மேலாக உவர்த்தன்மை மாறி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேமுறை ஒவ்வொரு பருவகால மழையுடனும் செயற்படுத்தப்பட்டு வந்தால் ஐந்து, ஆறு வருடங்களில் அப்பகுதிகளில் உள்ள சகல கிணறுகளில் இருந்தும் நன்னீரை நிரந்தரமாகப் பெற முடியும் என்றும் கூறினர்.

109

## அச்சாழைக் குளம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டு நிதியைக்கொண்டு வலிகாமம் பகுதியில் அமைந்திருக்கும் அச்சாழைக்குளம் தேசநிர்மாணிகளால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் பயிர் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளும் பெரும் நன்மையடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சமாதானம் ஏற்படாவிடின் எமக்கும் பாதிப்பே ஏற்படும்

## — பிரிகேடியர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானம்ஏற்படுவதையே இராணுவத்தினரும் விரும்புகின்றனர். சமாதானம் ஏற்படாவிடின் அது எமக்கும் பெரும்பாதிப்பாகவே அமையும்.

இவ்வாறு இரண்டாம் கட்ட பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக யாழ். வந்த இராணுவ அதிகாரியான பிரிகேடியர் பீரிஸ் ஹெலியில் இருந்து இறங்கியபின் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் கூறினர்

அரசின் சமாதான முயற்சியை ஆதரித்தே நாமும் இராணுவம்) இப்பேச்சுக்களில் சில விடயங்கள் தொடர்பாக பங்கு பற்றுகிறோம். இந்த பேச்சுக்கள் நன்ருக அமைந்து தீர்வு கிட்டவேண்டும் என்றே நாமும் விரும்புகிறோம். அதற்கான ஒத்துழைப்பை நாம் வழங்குவோம். எந்தவொரு கட்டத்திலும் நாம் சமாதானத்திற்கு முட்டுக்கட்டை போடமாட்டோம்.

யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்படும் போது அதனை சகல தரப்பினரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றார். - சி

தமிழாராய்ச்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிரியர் வேலுப்பிள்ளை பேராசிரியர் பீற்றர் ஷால்க், பேராசிரியர் சண்முகதாஸ் ஆகியோரும் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ளவிடாமல் தடுத்து அனுப்பப்பட்டுள்ளனர்.

இச் செயலை கண்டித்து தி. மு. க. தலைவர் மு. கருணநிதி, இ, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. நல்லகண்ணு, ஆர். திருநாவுக்கரசு ஆகியோர் தனித்தனியாக கண்டன அறிக்கை வெளியிட்டனர். கே—ரி

### மணிவாக்கு

நன்மை பயக்கும் அறமே என் தந்தை. நிறைந்து விளங்கும் அறிவு என் தாய். அழிவற்ற செல்வம் என்ற கல்வியே என் நண்பன். தெரிந்த மனத்துணிவே என் தம்பி. இவர்கள் என்னுடைய மெய்யான சுற்றத்தார். சுற்றம் என்ற பெயரில் என்னைச் சுற்றிச்சுற்றி வரும் மற்றவர்கள் அனைவரும் பொய்ச்சுற்றத்தாரே.

- அறநெறிச்சாரம்

## நமது நோக்கு

### கூட்டத்திற் கூடி நின்று...!

எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு தஞ்சையில் கோலாகலமாக நடைபெறுகின்றது.

தமிழ் மொழியும் பண்பாடும் மலர்ச்சி அடைய வேண்டும் என்ற நோக்கோடு கோலாலம்பூரில் ஆரம்பித்த இந்த மாநாட்டுத் தொடர் இன்று வெறும் கோலாகல நிகழ்ச்சியாக மாத்திரம்தான் மாறிவிட்டதா?

பல உலகத் தமிழறிஞர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், மாநாடு முறையாகக் கூட்டப்படவில்லை என்றும் பல இடங்களிலிருந்து குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அதுமாத்திரமல்ல - தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்குத் தமிழக அரசு போதிய அக்கறை காட்டவில்லை என்ற குரலும் ஒங்கி ஒலிக்கிறது.

தஞ்சைக்குப் புகழ் சேர்த்ததே, தமிழனின் பொற்காலத்தை உருவாக்கிய சோழ மன்னர்கள் என்பதை மறக்கலாமா?

இராஜராஜசோழனுல் கட்டப்பட்ட தஞ்சைப் பெருங்கோவில், தமிழனின் சிற்பக் கலைச் சிறப்பை உலகெங்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது!

அந்த மன்னனதும்அரசியினதும் சிலைகள் அங்கிருக்கின்றன. ஆனால் அவை போலியானவை என்றும், முதலிற் செய்யப்பட்டவை ஆமதாபாத் சாராபாய் அரும்பொருட்காட்சியகத்திலே உள்ளன.

கல்வெட்டுச் சான்றுகளோடு கலாநிதி நாகசாமி போன்ற பல வரலாற்றுத் தொல்பொருள் ஆய்வாளர்கள் இதனைத் தெரிவித்தார்கள்.

பின்னர் வந்த மராட்டியர்கள் ஆட்சிககாலத்தில், வாரிசு உரிமைப் போட்டியால், கோவில்களும் பாகப்பிரிவினைக்குச் சிக்கியதால், சிலைகளும் இடம் மாறின.

அச்சிலைகளை மீட்டுக் கொண்டு வந்து சோழ மன்னனின் புகழை நிலைநாட்ட அரசு தவறிவிட்டது.

செயல்வீரர்களைப்போற்ருது வெறும் சொல்வீரர்களின் புகழ் பாடிக்கொண்டிருப்பதால் வந்த வினை இது!

தமிழன் மீண்டும் தலை நிமிர்ந்து வாழச் செயலூக்கம் அவசியம்.

''கூடடத்திற் கூடி நின்று கூவிப் பிதற்றலின்றி நாட்டத்திற் கொள்ளாரடீ!'' என்ற பாரதியார் பாட்டை நினைவுபடுத்த வேண்டியுள்ளது!

## பலதும் பத்தும்

### அக்கரைச் சீமையில்

இந்த நாட்டுத் தமிழ் மக்களது சமகால வாழ்வின் ஓர் அம்சத்தைச் சித்தரிக்கும் ஒரு கதையாக எழுதியுள்ளேன்!'' அக்கரைச் சீமையிலே'' என்ற நாவலை எழுதிய அராலியூர்ச் சுந்தரம்பிள்ளை.

வெளிநாடுகளில் வசிக்கும் சிலர் தமிழ்ப் பண்பை மறவாது போன காரியத்திற்' கண்ணும் கருத்துமாக இருக்கிருர்கள். ஆனல் வேறு சிலரோ எப்படியெல்லாமோ நடந்து தமிழினத்திற்கு இழிவு தேடுகிருர்கள்.

நாவலாசிரியர் - தான் கேள்விப்பட்டதை-யும், படித்தறிந்ததையும், கற்பனையையும் கலந்து நாவலாக்கியதோடு, இடையிடையே சில சமகால நிகழ்வுகளையும் பதிவுசெய்துள்ளார். பிற்காலச் சந்ததியினர் இப்படியெல்லாம் நடந்ததா என்பதை உணர வைக்க முயன்றிருக்கிருர்,

சாய்மனையிற் சாய்ந்திருந்து, தமது வெளிநாட்டுப் பிள்ளைகளின் வீரப்பிரதாபங்களை'க் கடிதம் மூலம் வாசிப்பவர்களை இந்த நாவல் உலுப்பவும் கூடும்?

—மயூரன்

## இராசி பலன்

4—1—1995
புதன்கிழமை

(தமிழுக்கு மார்கழி 20)

திருதியை பிற்பகல் 12-27 வரை; திருவோணம் மு. ப. 8-36 வரை; சித்தயோகம், இராகுகாலம் நண்பகல் 12-31 முதல் 2-12 வரை; சுபநேரம் மாலை 5-01 முதல் 6-31வரை

மேஷம்: பயனுள்ளசெயல் தாயார் அறிவுரை பணவரவு.

இடபம்: புரியாத புதிர், வாழ்க்கை கசத்தல், அலைச்சல்.

மிதுனம்: தொழில் பங்கம் நண்பர் கவலை, அகாலஉணவு

கடகம்: முதன்மை நிலை பதவியேற்றம் தியானம்.

சிங்கம்: போராட்ட உணர்வு கடன்சுமை கண்டனம்.

கன்னி: தொழில் கஸ்டம். மனவேதனை மனப்பயம்.

துலாம்: கண்கலங்குதல், சகோதரவன்மை கடினவாக்கு

விருச்சிகம்: சுயவிரயம், உறவினர் சந்தோஷம் பயணம்

தனுசு: சுயநலப் போக்கு, குடும்பசுகம், தெய்வசிந்தனை.

மகரம்: எதிர்பாராதவசதி மனமகிழ்ச்சி வாக்குவன்மை

கும்பம்: குதர்க்க வாதம், அவப்பெயர் கெட்டசகுனம்.

மீனம்; இனசன பெருமை சாதுரியப்போக்கு எதிரிகளால் ஜெயித்தல்.

ஜோஸ்யர்

### ஒளிவிழா

(நெல்லியடி)

பருத்தித்துறைகட்டைவேலி மெதடிஸ்த சேகரத்தின் ஒளி விழா எதிர்வரும் 6ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி திறந்தவெளி அரங்கில் நடைபெறவிருக்கின்றது.

சேகர முகாமைக்குரு அருட்திரு மேதர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சேகரத்திலுள்ள ஐந்து ஆலயங்கள் பங்குபற்றுகின்றன.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-01-04**
புதன் இரவு

08-01 புரட்சிக்குரல்
08-05 கலைமஞ்சரி- நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம். அறிமுகமாகுபவை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினுல் வெளியிடப்பட்ட ''சுவடுகள்'' ''இதயநாதம்'', ''எங்கள் தாய்த்திருநாடு'' ஆகிய மூன்று நூல்கள். அதனையடுத்து சிறுகதை- வானேசை 4ல் முதலாவது பரிசு பெற்ற த. சங்கீதன் எழுதிய ''ஆரம்பம்'' சிறு கதையைத் தொடர்ந்து கவிதை- வானேசை 4ல் முதலாது பரிசு பெற்ற செல்வி பாரதிப்பிரியா எழுதிய ''புதிய சூரியா உதயமாகிருர்''
08-30 செய்திகள்
08-40 கருத்துக்களம்- இ. இராஜேவரன் எழுதிய ''அனுமதி''
08-50 சித்தமருத்துவக் குறிப்கள்
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும்நிறைவு பெதும்

**1995-01-05**
வியாழன் காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 விடுதலைக் கீதங்கள்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப் பாடல்கள்
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும்நிறைவு பெறம்

### தமிழீழ வானெலி நிகழ்ச்சி நிரல்

**1995—01—04**
புதன் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-10 புதியவை
05-15 படப் பாடல்கள்
05-30 அறிவூற்று
06-00 சிந்தனைக்குச் சிலவிஞடிகள்
06-05 உங்கள் தெரிவு
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 உங்கள் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

# லயனல் வராமைக்கு வேலைப் பளுவே காரணம்!

(யாழ்ப்பாணம்)

அதிக வேலைப்பளு காரணமாகவே விடுதலைபுலிகளுடனுன 2ம் கட்டப் பேச்சில் கலந்து கொள்ள திரு. லயனல் பெர்ணண்டோ வரவில்லை என அரச குழுவின் தலைவர் திரு. பலபத்த பெண்டி தெரிவித்தார்.

கடந்த பேச்சில் கலந்து கொண்ட திரு. லயனல் இம்முறை ஏன் வரவில்லை எனக் கேட்டபோதே திரு. பலபத்த பெண்டி இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை இக்குழுவில் அங்கம் வகிக்கும் ஏனையோரிடம் இதுபற்றி கேட்டபோது லயனல் வராமைக்கான காரணம் தங்களுக்கு தெரியாதென்றும் சிலவேளை தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் வராமல் போயிருக்கலாமெனவும் கூறினர்.

இதேவேளை வடக்கு-கிழக்கு ஆளுநராக திரு. லயனல இருந்தபோது வடக்கு கிழக்கு மாகாணசபையில் கல்விசம்பந்தமானவிவகாரங்களில் பெரும் மோசடிகள் இடம்பெற்றதாக தமிழர் ஆசிரியர்சங்கம்விடுத்த அறிக்கையை தொடர்ந்து பெரும் சர்ச்சைகள் எழுந்ததும் தெரிந்ததே. (சி)

இராணுவ

[1 பக்கத் தொடர்ச்சி(

ஐவர் அடங்கிய அரச பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் ஜனுதிபதியின் செயலருமான திரு. பலபத்த பெண்டி ஹெலியிலிருந்து முதலில் இறங்கினர். இவரையடுத்து இலங்கை வங்கித் தலைவர் திரு. ராஜன் ஆசீர்வாதமும், அடுத்து இராணுவ தரப்பைச் சேர்ந்த பிரிகேடியர் எ. எஸ். பிரிசும், கடற்படையைச் சேர்ந்த கப்டன் பிரசன்ன ராஜரெட்னவும் அதன்பின் கட்டிடக் கலைஞர் நவீன் குணரட்ணவும் இறங்கினர்

ஹெலிகொப்டரின் அருகில் சென்று இவர்களை விடுதலைப் புலிகள் அரசியல் துறையைச் சேர்ந்த திரு. தங்கன் கை கொடுத்து வரவேற்றார், இவருடன் திரு, தயாநிதி மாஸ்ரரும்' திரு. பாபாவும் உடனிருந்து அரச குழுவினரை வரவேற்றனர்.

அரச பிரதிநிதிகள் குழுவுடன் ரூபவாஹனி படப்பிடிப்பாளரும், தகவல்திணைக்கள புகைப்பட பிடிப்பாளரும் ஹெலிகப்டரில் வந்தனர். முதலாம் கட்டப் பேச்சின் போது அரச குழுவினர் வந்த ஹெலிகொப்டர் இம்முறை வரவில்லை. இது மற்றொரு இராணுவ ஹெலிகொப்டராகும்.

அரச தரப்பு குழுவில் வந்த பிரிகேடியர் பீரிஸ் இராணுவ சீருடையும் இராணுவ தொப்பியும் அணிந்திருந்தார். அதே போன்று கடற்படை அதிகாரி கப்டன் பிரசன்ன ராஜரெட்ன கடற்படை கப்டனுக்குரிய வெண்ணிற சீருடையும் அதற்குரிய தொப்பியும் அணிந்திருந்தார்

இவர்கள் அனைவரும் பாடசாலை மைதானத்தினுள் இருக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபரின் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவ்விடத்தில் வைத்து இவர்களை இரண்டாம் கட்டப்பேச்சில் கலந்து கொள்ளும் விடுதலைப் புலிகள் தரப்பைச் சேர்ந்த திரு. தமிழ்ச்செல்வன், திரு. கரிகாலன், திரு. டொமினிக், திரு. ரவி, திரு. இளம்பரிதியும் வரவேற்றனர்.

இதன்போது அங்கு கூடியிருந்த உள்ளூர் பத்திரிகையாளர்களுடன் அரச தரப்பு பிரதிநிதிகள் கலந்துரையாடினர். சிறிது நேரத்தின்பின் விடுதலைப் புலிகள் பாதுகாப்பு பிரிவினரின் வாகனங்கள் அணிவகுத்துச்செல்ல அரச குழுவினர் இரு வாகனங்களில் பேச்சுக்கள் நடைபெறும் சுண்டுக்குளியிலுள்ள தமிழீழ அரசியல் துறை நடுவப் பணியகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு உடனடியாகவே இரு தரப்பினரும் பேச்சுக்கள்நடைபெறும் மண்டபத்திற்குச் சென்று தத்தமது ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்தனர்.

இதனையடுத்து சுமார் ஐந்து நிமிடங்கள் அரச தரப்பு குழுவினரை உள்ளூர் பத்திரிகையாளர்கள் சந்தித்தனர். இதன்பின் உடனடியாகவே இருதரப்பு பேச்சுக்களும் ஆரம்பமானது.

அரச பிரதிநிதிகள் நேற்றுக் காலை 7.15 மணியளவில் இரத்மலானை விமான நிலையத்திலிருந்து விஷேட விமானம் மூலம் புறப்பட்டு 8.15 மணிக்கு பலாலி வந்தடைந்தனர். அங்கிருந்து 8.50 மணிக்கு இராணுவ ஹெலி மூலம் பலாலியிலிருந்து சென் ஜோன்ஸ் மைதானத்திற்கு வந்திறங்கினர்.

அரச பிரதிநிதிகள் குழு இரத்மலானையிலிருந்து புறப்பட்டபோது இவர்களை வழியனுப்ப அரச தரப்பிலிருந்து எவரும் வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

மக்களின்


[2ம் பக்கத் தொடர்ச்சி]

ஐந்தாவதாக யாழ்.குடாநாட்டிலுள்ள தமிழ் மக்கள் மீள்குடியேற்றம் பிரச்சனை பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும். அகதியாக இடம்பெயர்ந்து வரும் இம்மக்கள் தமது கிராமங்களுக்கு மீண்டும் குடியேறி வாழ்வதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக நீங்கள் வாக்குறுதியளித்தது போல புனர்நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு உடனடியான நடவடிக்கைகளை எடுப்பீர்களென எதிர்பார்க்கின்றோம். இதுவே எமது மக்களின் அன்றாடப்பிரச்சனை யாகும்.

இநத இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் எமது மக்கள் எதிர் கொள்ளும் இந்த அத்தியாவசியப்பிரச்சனை தீர்ப்பதற்கு ஆக்க பூர்வமான முடிவுகள் எடுக்கப்படுமென நாம் நம்புகின்றோம். (சி - வி - ரி)

**இன விடுதலை வேண்டின் வன நடுதலை செய்வோம்**



பேச்சுக்களில் கலந்து கொள்வ யாழ்.வந்த இராணுவ அதிகாரி பிரிகேடியர் பீரிஸ், திரு. பலபத்த பெண்டி ஆகியோர் ஹெலிஹொப்டரில் இருக்கும்போது எடுத்த படம்.

படம்: 'தேவா'

# "போக்குவரத்திற்கு பூநகரி பாதை திறக்கப்படவேண்டும்"

## புலிகள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்திற்காக பூநகரிப் பாதையை திறக்கப்படவேண்டுமென விடுதலைப் புலிகள் நேற்றைய பேச்சில் வலியுறுத்தியுள்ளனர். இதற்காக பூநகரியிலுள்ள இராணுவ முகாம் அகற்றப்படவேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

இதுபற்றி திரு. தமிழ்ச்செல்வன் கூறுகையில். பூநகரிப் பாதை ஏன் திறக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கான விளக்கத்தினை கொடுத்துள்ளோம்.

ஆனையிறவு பாதையை திறக்கவே அவர்கள் விரும்புகிறார்கள். அப் பாதையை திறக்கலாம் எனக் கூறினர். அதற்கு நாம் பூநகரிப் பாதையைத் திறந்து மக்கள் சுதந்திரமாக நடமாடவிடவேண்டும். இதற்காக அங்குள்ள படைமுகாமை அகற்றிய பின் ஆனையிறவு பாதையை வேண்டுமென்றால் திறக்க நாம் அனுமதிப்போம் எனக் கூறினோம்.

இவை பற்றியும் தயங்கள் கொழும்பு சென்று கதைத்து முடிவெடுத்து அடுத்தகட்ட பேச்சின்போது அதுபற்றி கூறுவதாக தெரிவித்தனர். இன்னும் ஒரு முடிவும்கூறவில்லை. சி-வி—ரி

## கரவைக் கந்தசாமி வீட்டில்
# தங்கிய பல்கலைக்கழக மாணவி தலைமறைவு

(கொழும்பு)

கொழும்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட புளொட் உபதலைவர் கரவை கந்தசாமியின் ம ணத்தையடுத்து அவரது வீட்டில் தங்கியிருந்த பல்கலைக் கழக மாணவி ஒருவர் தலைமறைவாகிவிட்டார்

இம்மாணவியை தேடி பொலிஸார் வலைவிரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (சி-ரி)

அரசு-புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு நேறறு நடைபெற்ற 2ம் கட்டபேச்சுக்களின் பின் விடுதலைப் புலிகள் தரப்பில் பேச்சுக்களில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளருமான திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்ததார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்; நேற்றைய பேச்சுக்களில் முக்கியமாக மோதல் தவிர்ப்பு செய்வதும், அதனை கடைப்பிடிப்பதும், அது சம்பந்தமான ஒழுங்குவிதிகளை இரு தரப்பும்மேற்கொள்வதும், போர் நிறுத்தத்தை கண்காணிக்கும் சமாதான குழுக்களை அமைப்பது உட்பட பல விடயங்களில் ஓர் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

ஆனால் மோதல் தவிர்ப்பு எப்போது முதல் அமுலுக்கு வரும் என்பது பற்றி இன்று அல்லது நாளை அறிவிக்கப்படும். முதலில் இதனை அரசு அறிவிக்கும்பின்னர் விடுதலைப் புலிகள் அறிவிப்பர்,

இந்த மோதல் தவிர்ப்பு நடவடிக்கையானது இறுதியில் ஒரு பரிபூரணமான போர் நிறுத்தமாக (Cease fire) பரிணமம் கொள்ளும். இது தொடர்பாகவும் இருதரப்பும் பேச்சுக்கள் நடாத்தி முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விபரங்கள் அடுத்த ஓரிரு தினங்களில் வெளிவரும்.

இந்த மோதல் தவிர்ப்பு நடவடிக்கை இருவாரத்திற்கு பிரகடனப்படுத்தப்படும். பின்னர்அது படிப்படியாகநீடிக்கப்படும். ஆனல் அதைபூரணயுத்தநிறுத்தமாக தொடர்ச்சியான நிலையான யுத்த நிறுத்தமாக மாற்றுவது குறித்தும் பேசிமுடிவெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

நேற்றைய பேச்சுக்களின் விபரங்கள் குறித்து கூட்டறிக்கை ஒன்று வெளிவரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது,

இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் இரண்டாம் கட்ட பேச்சுக்களில் கலந்து கொண்ட விடுதலைப்புலிகளின் ஏனைய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். சி-வி-ரி

சமஷ்டி முறையே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் நம்புகிறேன்.

நான் ஜனாதிபதியாகப்பதவி வகித்த காலப்பகுதியில் சமஷ்டி ஆட்சிமுறையை ஒரு தீர்வாக வழங்கமுடியாத நிலையில் நான் இருந்தேன் என்றுதான் கூறவேண்டும்.

ஏனெனில் இந்தநாட்டின் பெரும்பான்மை இனமக்கள் அன்று சமஷ்டித் தீர்வை வழங்குவதற்கு தயாரான நிலையில் இருக்கவில்லை.

இனப்பிரச்னையைத் திர்ப்பதற்கு நாம் சர்வகட்சி மாநாட்டை நடத்தினோம். ஆனல் அது வெற்றியளிக்கவில்லை.

விடுதலைப் புலிகள் சமஷ்டி ஆட்சி அமைப்பு ஒன்றைக் கோரினர். ஆனல் தென்பகுதி மக்கள் புலிகள் கேட்டதைக் கொடுக்க விரும்பவில்லை. இவர்கள் கொடுக்க விரும்பியதை புலிகள் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. அப்போது எதையாவது செய்ய வேண்டியிருந்தது ஆனல் இனப்பிரச்னை தீர்வில் பலாத்காரம் கடைப்பிடிக்கப் பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்?

ஐக்கிய தேசியக் கட்சியை மீளக் கட்டியெழுப்புவதற்கு நான் எவருக்கும் இப்போது ஆலோசனை வழங்கியது கிடையாது. திரு. ரணில் விக்கிரமசிங்க தன் கடமைகளை சரியாகச் செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவருக்கு எனது ஆலோசனை தேவைப்பட்டால் நான் அதை வழங்குவேன். சந்திரிகா குமாரதுங்க கூட ஆலோசண் கேட்டால் அவருக்கும் நான் உதவுவேன்.

சந்திரிகா குமாரதுங்க நாட்டை சிறப்பாக ஆட்சி செய்வதை நான் அவதானிக்கிறேன். நாட்டில் இப்போது ஜனநாயகம் இருக்கிறது' ஜனநாயகம் உள்ளவரை நான் எதிர்ப்பாளனுக மாறமாட்டேன். எந்தஒரு குழுவுக்கும் நான் எதிரானவன் அல்ல. ஆனல் பயங்கரவாதத்தை நான் எதிர்க்கிறேன் என்றார்.

இ ரி

பேச்சு வெற்றி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை தாங்கிச் சென்ற ஜனதிபதியின் செயலர் கே. பாலபட்டபெண்டி நேற்று இவ்வாறு தெரிவித்தார்

கொழும்பு இரத்மலான விமான நிலையத்தில் பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணத்தில் புலிகளுடன் பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டு திரும்பியபோது திரு பாலபட்டபெண்டியைப் பேட்டி கண்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டாம் கட்டப்பேச்சு வார்த்தையில் இடம் பெற்ற சில விடயங்களுக்கு ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரனதுங்காவே பதிலளித்து முகுவு சொல்ல வேண்டும் என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி இன்று (செவ்வாய்க்கிழமை) அரசதரப்பு குழு ஜனதிபதியை சந்திக்கவுள்ளது. இந்த சந்திப்பின் போது பேச்சு வார்த்தையின் முழுவிபரங்களும் ஜனதிபதிக்குத் தெரிவிக்கும் முகுவுகளையடுத்து முன்றும் கட்டப் பேச்சுவார்த்தைகளை நடாத்த அரசகுழு விரைவில் மீண்டும் யாழ்ப்பாணம் செல்லும்.

விடுதலைப்புலிகள் நல்லெண்ண சமிச்ஞையாக நான்கு பொலிஸாரை விடுவித்துள்ளனர் முதலில் இரு பொலிஸாரை விடுவிப்பதாகவே புலிகள் தெரிவித்தனர். எனினும் மகிய உணவுக்குப்பின் மேலும் இரு பொலிஸாரை விடுவிப்பதாகக் கூறினர்.

யாழ்ப்பாணத்தை புனரமைப்பு செய்வதற்காக 390 கோடி ரூபா திட்டம் ஒன்றை அரசு தயாரித்திருக்கிறது. இதனை உடன் அமுல் செய்வதற்கு இந்த நிதியை வழங்கவும் அரசு தாயாரக உள்ளது. இந்தத் திட்டத்னகயும் நாம் அங்கு எடுத்துச் சென்றேம்.

யாழ்ப்பாணத்துக்கான பாதை ஒன்றைத்திறப்பது குறித்தும் பேச்சுவார்த்தை நடாத்தினேம், ஆனையிறவு, பூநகரி சங்குப்பிட்டி இரு ராதைகள் பற்றியும் நாம பேசினேம்,

பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயத்துக்கு முன் இந்தப்பாதைகளைத் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்படும் என நம்புகிறேன்.

மோதல்கள் நிறுத்துவது பற்றியும் பேசினேம். அதை எவ்வாறு கடைப்பிடிப்பது என்பது பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கும் அடித்தளமாக மோதல்களை நிறுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது.

சாகரவர்த்தனு கப்பல் அதிகாரி கப்டன் போயாகொட மற்றும். அதே கப்பலின் விநியோக அதிகாரி விஜித ஆகிய இருவரையும் எங்கும் கொண்டு வந்துகாட்டினார்கள். இவர்கள் இருவரின் விடுதலை குறித்தும் புலிகள் எம்மிடம் எதுவும் தெரிவிக்க வில்லை.

மோதல்களை நிறுத்துவதற்குத் தேவையான முடிவை எடுப்பதற்கு இராணுவத்தினரின் கருத்துக்களும் ஆலோசனைகளும் தேவைப்பட்டன அதனுலேயே இம்முறை நாம் இரண்டு படைஅதிகாரிகளை அழைத்துச் சென்றேம்.

பூநகரிப் பாதையுடன் ஆனையிறவுப் பாதையையும் திறப்பதே எமது நோக்கமாகும் என்றார். ]இ-ரி]

# 3-ம் கட்டப் பேச்சுக்கள் 14 ம் திகதி நடைபெறும்

(யாழ்ப்பாணம்]

விடுதலைப்புலிகளுக்கும் அரசபிரதி நிதிகளுக்குமிடையிலான 3-ம் கட்டப்பேச்சு வார்த்தைகள் எதிர்வரும் 14-ம் திகதி சனிக்கிழமை மீண்டும் யாழ். நகரில் நடைபெறுமென்று நேற்று அறிவிக்கப்பட்டது.

3-ம் கட்டப் பேச்சு வார்த்தைகளின் போது பாதை திறப்பு. பொருளாதாரத் தடை முற்ருக நீக்கம், கடல் வலய தடைச்சட்டம் நீக்கம் அகதிகளின் மீளக்குடியமர்வு போன்ற விடயங்களில் குறித்து முக்கிய முடிவுகளுடன் அரச பிரதிநிதிகள் யாழ். வருவார்கள் எனத் தெரிவிக்சப்படுகிறது,

2ம் கட்ட பேச்சில் கலந்து கொண்ட அதேகுழுவினரே 3ம் கட்டப் பேச்சிலும் கலந்து கொள்வார்கள். (சி-வி-ரி)

அன்ருட

1ம் பக்கத் தொட ச்சி)

கொண்டு, தமிழரின் அன்ருடப் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கவேண்டும்.

நேற்றைய இரண்டாம் கடடப்பேச்சுக்களின்போது, விட்தலைப் புலிகளின் பிரதிநிதிகள் இதனை அழுத்தம் திருத்தமாகப் பல தடவைகள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த அன்ருடப் பிரச்னைகள் குறித்து விடுதலைப் புலிகளால் ஏற்கனவே ஒவ்வொன்ருக—விரிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது நாங்கள் முதலில் கூறியது போல் ஐந்து பிரச்னைகளாகும்.

போர் நிறுத்தம் — இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கு உருப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அதில் சில விடயங்களில் ஓரளவு இணக்கம் ஏற்பட்டுள்ளது.

★ பொருளாதாரத் தடை முற்ருக நீக்கம் —இவ்விடயம் குறித்துத் தாங்கள் கொழும்பு சென்றதும் கதைத்து, அடுத்த கட்டப் பேச்சுக்கு வரும்போது ஒரு முடிவுடன் வருவதாகக் கூறியுள்ளனர்.

மற்றும் தடை நீக்கம் செய்யப்பட்ட பொருட்களை இங்கு கொண்டுவருவதற்கு ஏற்பட்டுள்ள பல தடங்கல்கள் (வவுனியாவில்) நீக்கப் படவேண்டிய அவசியம் பற்றியும் விளக்கமளித்தோம் அதனையும் தாங்கள் நிவர்த்தி செய்வதாக உறுதியளித்தனர்

சிங்கள மக்களுக்கு எவ்வாறு பொருட்கள் சுதந்திரமாகக் கிடைக்கிறதோ, அதே போன்று இங்கும் தமிழ் மக்களுக்குப் பொருட்கள் கிடைக்க வேண்டும். அதுதான் உண்மையான பெபருளாதாரத் தடை நீக்கம் என்று நாம் ஆணித்தரமாக வலியுறுத்தினேம் என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

★ பாதை திறப்பு
★ கடல் வலயத் தடைச் சட்டம் நீக்கம்
★ இடம் பெயர்ந்த அகதிகள் மீளக் குடியமர்த்தல்

மக்களின் அன்ருடப்பிரச்னைகளுக்குத் தீர்வுகண்டு, சகஜ நிலையைத் தோற்றுவித்து, ஓர் உறுதியான போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி மக்களின் சமூக,பொருளாதாரவாழ்வை மேம்படுத்த உருப்படியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என திரும்பத் திரும்ப நாம் வலியுறுத்திக் கூறியுள்ளோம் இதற்கு நாம மிகுந்த முன்னுரிமை கொடுப்பதாகவும் அவர்களிடம் கூறினேம். (சி - வி - ரி)

## மோதல் தவிர்ப்யு குறித்து
# ஜனபதி அறிவிப்பார்!

(யாழ்ப்பாணம்

இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் குறித்து, நேற்றிரவு அல்லது இன்று காலை ஜனதிபதி சந்திரிகாவுக்கு அரச பிரதிநிதிகள் குழுவினர் விளக்கம் அளிப்பர் என எதிர்பார்க்கப்பட்டது.

நேற்றைய பேச்சுக்களில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்தும், மோதல் தவிர்ப்பு இணக்கம் காணப்பட்டது குறித்தும் ஜனதிபதிக்குத் தெரிவிக்கப்படும. அதன் பின் அவர் மோதல் தவிர்ப்பு எப்பொழுது முதல் அமுலுக்கு வரும் என்பதை பகிரங்கமாக அறிவிப்பார் என அரச பிரதிநிதிகள் தெரிவ்த்தனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளால் நேற்றைய பேச்சுக்களில் வலியுறுத்தப்பட்ட விடயங்கள் குறித்து ஜனதிபதியுடனும், சம்பந்தப்பட்ட ஏனையவர்களுடனும் கலந்து ஆலோசிக்கப்பட்ட பின்னர் முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

இந்த முடிவுகளையும் ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் 3ம் கட்டப் பேச்சுக்களின்போது விடுதலைபு புலிகளுடன் ஆலோசிப்போம் எனவும் தெரிவித்தனர்.

சி-வி-ரி

நல்லெண்ண

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அத்துக்கொறள (கொழும்பு] ஆகிய நான்கு பொலிஸாருமே நேற்று விடுதலை செய்யப்பட்டார்கள்.

மேற்படி நாலு பொலிஸாரையும், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு, ப. தமிழ்ச்செல்வன். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் முறைப்படி ஒப்படைத்தார். பின்பு இவர்கள் நால்வரும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அரச தூதுக்குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த நாலு பொலிஸாரும் நேற்று ஹெலிஹொப்டர் மூலம் அரச தூதுக்குழுவுடன் பலாலிக்குச் சென்று அங்கிருந்து கொழும்பு சென்றனர். (வி - சி-ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-